Chapter XXII Code of Criminal Procedure.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.

Case No.: ***CC. 83/2021***

Deposition of Witness for Prosecuting/Defence/Court ***PW-6 (LW-2)***

Name / Father's Name: ***திருமதி.மோகனா க/பெ. பாலு (எ) பாலசுப்ரமணியம்***

Village/ Taluk:

Calling, Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.07.2026.**

துவக்க நேரம் 11.59 F.N

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்பொழுது நாகியம்பட்டியில் குடியிருந்து, பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 10 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் ஒரு விபத்து நடந்ததாக நான், கோவிலுக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தபிறகு கேள்விபட்டேன். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்யவில்லை.

அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

சம்பவம் நடந்த இடத்திற்கும், எனது கடைக்கும் இடையே சுமார் 20 அடி தூரம் இருக்குமா என்றால் ஆமாம். கடந்த 06.05.2016 அன்று காலை 09.30 மணிக்கு நான், எனது பெட்டிக்கடையில் இருந்தபொழுது, எங்கள்

ஊரைச்சேர்ந்த சுப்ரமணி மகன் முருகேசன் என்பவர், எங்கள் கடையில் பொருட்கள் வாங்கிக்கொண்டிருந்ததாகவும், அவரது மகன் மெய்யழகன், எங்கள் கடைக்கு முன்னால் உள்ள பிள்ளையார் கோவில் மண்சாலையில் மேற்குபுற ஓரமாக நின்றுகொண்டிருந்தான் என்றும், அப்பொழுது நாகியம்பட்டி பஸ்ஸ்டாப் அருகிலிருந்து, பிள்ளையார் கோவில் நோக்கி வடக்கிலிருந்து தெற்காக வந்த TN 77 A 3177 என்ற டிப்பர் லாரியை ஓட்டிவந்த வாகனத்தின் ஓட்டுனர், ஓரமாக நின்றுகொண்டிருந்த மெய்யழகன் மீது அவரது டிப்பர் லாரியை மோதியதில், மெய்யழகனின் வலதுபக்க தலையிலும், தலையின் பின்பகுதி முழுவதும் நசுங்கிவிட்டது என்றும், மேற்படி சம்பவத்தை நான் சென்று பார்த்தபொழுது மெய்யழகன் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 12.12 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.07 18:14:48 +0530

Judicial Magistrate No.2, Attur.